IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.116/2016
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.1 சாட்சி சத்தியஸ்ரீதர் த.பெ.பாலசுந்தரம்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 10.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம்.எ பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் பிளாஸ்டிக் வியாபாரம் செய்து வருகிறேன். 1ம் பிரதிவாதி என் மனைவி என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் அதனை சுற்றி அமைத்துள்ள சொத்துக்கள் அனைத்தும் வாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியம் என்றால் சரிதான். வழக்கிற்கான விபரங்களை எனது வழக்கறிஞருக்கு நானும் எனது மனைவியும் கொடுத்தோம் என்றால் சரிதான். சர்வே எண். 283/1A ல் 2 1/2 செண்டு சர்வே எண். 283/9 ல் 13 1/2 செண்டும் என்றால் சர்வே எண். 283/1A என்பது சரியல்ல, சர்வே எண். 283/1 என்பதே சரி.

2. மேற்படி சொத்துக்களுக்கு தாவா சொத்தின் மேற்கே நான் கிரையம் பெற்ற சொத்து உள்ளது என்றால் சரிதான். சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 284/3 ஆகும். விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 65 செண்டுகளாகும். மேற்படி 1 ஏக்கர் 65 செண்டு ஆதியில் வாதிகள் குடும்பத்திற்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு கிழக்கே என் மனைவியின் பெயருக்கு ஒரு பிளாட் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. பிளாட் எண் என்ன என்றால் எனது மனைவி பெயரில் பிளாட்

எண். 7, 8 ஆகும். மேற்படி பிளாட்டின் கிழமேலாக 42 அடி, தென்வடல் 80 அடி என்றால் சரிதான். அவர் கிரையம் பெற்ற அளவுக்கு மட்டுமே பாத்தியம் என்று சொன்னால் சரிதான். அதற்கு மேற்கொண்டு பாத்தியம் இல்லை. அதை நான் கிரையம் பெறும்போது அளந்து பார்த்துதான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான்.

3. சர்வே எண். 282/1, 283/1, 283/9 ஆகியவற்றின் சர்வே எண். 282/1 வாதிகள் குடும்பத்திற்கு பாத்தியமா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 2 ல் மேற்படி சொன்ன விஸ்தீரணம்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என் பெயரில் கிரையம் பெற்ற தாவா சொத்திற்கு மேற்குபுறம் 1ஏக்கர் 65 செண்டு, சர்வே எண். 284/3 ல் கட்டுப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பிளாட்டுகளாவும், மொத்தமாகவும் பிரித்து பல்வேறு நபர்களுக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். பிளாட் எண். 1 முதல் 4 வரை சர்வே எண். 282/1 ல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு தெற்கே பிளாட் எண். 5, 6, 7 சர்வே எண். 283/1 ல் உள்ளது என்றால் சர்வே எண். 283/9லும் வரும். பிளாட் எண். 283/1 ல்தான் வரும் என்றால் சரிதான். பிளாட் எண். 7 ல் பாதியும், பிளாட் எண். 8, 9 முழுமையாக சர்வே எண். 283/9 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

4. சர்வே எண். 283/1 என்பது 16 செண்டு விஸ்திரணம் என்றால் தெரியாது. அதற்கு தெற்கே சர்வே எண். 283/9 என்பது 86 1/2செண்டு என்றால் சரிதான். இரண்டு சர்வே எண்களும் சேர்த்து 1 ஏக்கர் 2 1/2 செண்டு என்றால் சரிதான். சர்வே 283/1 ன் மேற்கு கடைசி முக்கோண வடிவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண். 283/1ற்கு மேற்கேயும், தெற்கேயும்

சர்வே எண். 283/9 ல் எல் வடிவத்தில் வருகிறது என்றால் தவறு. எனது தரப்பில் எனது மனைவியின் பெயரில் பெறபெற்ற பட்டாவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிகள் போடப்பட்ட பிளாட்டு எண்கள் 1 முதல் 9 வரை ஒரே சதுர வடிவில்தான் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் தாவா சொத்துகளுடன் சேர்த்து காம்பவுண்டு சுற்றுச்சுவர் எழுப்பி ஆக்கிரமித்துவிட்டேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 283/1 , 283/9 ல் எனது பெயரில் கிரையம் இல்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்து தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்தின் ஏலம் எடுத்து பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்திற்கும், எனது மனைவி கிரையம் பெற்ற சொத்திற்கும் இடையே உள்ளதுதான் தாவா சொத்துக்கள் அதனை ஆக்கிரமித்துகொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. பிளாட் எண். 7, 8 ற்கு கிழக்கு பக்கம் 20 அடி ரோடு உள்ளது என்றால் சரிதான். சாலை அமைப்பதற்காக திருப்பரங்குன்றம் உள்ளாட்சி அமைப்புக்கு பல்வேறு பத்திரம் மூலமாக தானமாக கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

5. மேற்படி இடத்தில் சரியான அளவுகளின் படியே ஊராட்சிக்கு சாலைக்காக கொடுத்ததுபோக மீதியுள்ள இடத்தில் சரியான அளவுகளில் பிளாட்டுகள் பிரிக்கப்பட்டு வாதிகளால் விற்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.10 12:47:11 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.